1972 ஆகஸ்ட் 9]

அரிசன மாணவர் விடுதிகள்

*6 வினா—திரு. ஜே. எஸ். இராசு : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், பெரம்பலூர் நகரில் அரிசன நல இலாகாவால் நடத்தப்பட்டு வரும் மாணவர் விடுதிக்குச் சொந்தக் கட்டடம் கட்டப்பட வேண்டும் என்று கோரிக்கை ஏதேனும் அரசுக்கு வந்ததா?

(இ) ஆம் எனில், அதன் பேரில் அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) ஆம்.

(இ) அக்கோரிக்கையை அரசு பரிசீலனை செய்தது. ஆனால், தற்பொழுதுள்ள நிதிநிலை காரணமாக அதை ஏற்றுக்கொள்ள இயலவில்லை.

திரு. ஜே. எஸ். இராசு : தலைவர் அவர்களே, இருபத்தைந்து ஆண்டுகளாக அந்த மாணவர்கள் விடுதி பெரம்பலூரிலே நடைபெற்று வருகிறது. ஒரு குறிப்பிட்ட இடத்திலே அதற்காகக் கட்டடங்கள் கட்டவேண்டுமென்று அந்த இடத்தை அதற்காகக் கையகப்படுத்துவதற்காக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வருவாய்த்துறை வாரியத்தின் மூலமாகத் தலைமைச் செயலகத்திற்குத் தபால் அனுப்பி இருக்கிறார்கள். அதைப்பற்றி அரசாங்கம் என்ன முடிவு எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : மேலும் அதைப் பரிசீலனை செய்து 8,33,500 ரூபாய் மதிப்பீட்டுச் செலவிலே கட்டடம் கட்டப்பட வேண்டுமென்ற செயற்குறிப்பு அனுப்பப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த ஆண்டு அதற்குப் போதுமான அளவில் நிதிநிலைமை இடம் தராத காரணத்தினாலே எடுத்துக்கொள்ள முடியவில்லை.

*7 வினா—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஏழை அரிசன மாணவர்கள் மிகுந்துள்ள கும்முடிப்பூண்டியிலும், பெரியபாளையத்திலும் அரிசன மாணவர் விடுதிகள் திறக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : கும்முடிப்பூண்டியில் தாழ்த்தப்பட்டோருக்கான ஒரு அரசினர் மாணவர் இல்லம் 30 அனுமதிக்கப்பட்ட மாணவர் எண்ணிக்கையுடன் ஏற்கெனவே இயங்கி வருகிறது. பெரியபாளையத்தில் தாழ்த்தப்பட்டோருக்கான அரசினர் மாணவர் இல்லம் துவக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்பொழுது அரசிடம் இல்லை.

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, கும்முடிப்பூண்டியிலே நான் இந்தக் கேள்வி கேட்பதற்கு முன்னால் இருந்த நிலைமை மாறி விடுதி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதற்காக நான் அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த வினா காலதாமதமாக வந்திருக்கிறது. பெரியபாளையத்திலே அரிசன மாணவர்கள் இப்பொழுது தங்கிப் படிக்க வசதியில்லாமல் இருக்கிறது. ஆகவே பெரியபாளையத்திலே மாணவர்கள் தங்கிப் படிப்பதற்கு ஏற்றவகையிலே ஒரு விடுதியைக் கட்ட அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இதுவரையில் இதுபற்றி மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து குறிப்பு வரவில்லை. அவசியத்தை முன்னிட்டு செயற்குறிப்பு வருமானால் அதைப்பற்றி யோசிக்கலாம்.

Civil Supplies Corporation

* 8. *Q.*—THIRU N. K. PALANISAMY—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state the functions of the State Food Corporation constituted during 1972 ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : விலைவாசியைக் கட்டுப்படுத்துவதற்கு இன்றியமையாத எந்தெந்த உணவுப் பொருள்கள் குறித்துத் தமிழ்நாடு உணவுப்பொருள் வழங்கல் கழகம் அரசு வாணிகம் செய்யவேண்டிய தேவையிருக்குமோ, அவ்வப்போது அக் கழகம் அத்தகைய வாணிகம் செய்யும் பொறுப்பையேற்கும்.

திரு. என். கே. பழனிசாமி : சார், இப்பொழுது இந்த உணவுக் கார்ப்பரேஷன் கொள்முதல் செய்து சென்னையிலே மட்டுந்தான் விநியோகம் செய்கிறது. அதற்குப் பதிலாக மாவட்டங்கள் பூராவிலும் அரசு எல்லா அத்தியாவசியப் பொருள்களையும் சர்க்கரை போன்ற பொருள்களையும் குறைந்த விலையில் மக்களுக்கு விநியோகம் செய்வதற்கு சர்க்காரிடம் திட்டம் இருக்கிறதா ? அதைப்பற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, சென்னையில் மட்டும் அல்ல, கோவையிலும், இதுபோன்ற பங்கீட்டுக் கடைகள் வைத்து அரிசி கொடுக்கிறோம். தமிழ் நாட்டைச் சுற்றி 5 மைல் பெல்ட் ஏரியாவில் இதுபோல் செய்யப்பட்டிருக்கிறது. தமிழ்நாடு முழுவதும் குடும்பக் கார்டு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆங்காங்கு சர்க்கரை விநியோகிக்க அனுமதித்து சர்க்கரை கொடுக்கிறோம். தேவைப்படும் நேரத்தில், அரிசி விலை கூடுதலாக